(9-50 மணி)

2. தகவல் கோரல்.

(அ) சேரன்மாதேவித் தொகுதி பொட்டல் கிராமத்தில் பாறை உடைக்கும்போது அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, சேரன்மாதேவித் தொகுதியில் கல்லிடைக் குறிச்சிக்கு அருகே பொட்டல் என்ற கிராமத்தில் பெரிய பாறையை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்பொழுது, பாறை உடைந்து 5 பேர் மாண்டு உள்ளனர். ஒருவர் அதில் பொட்டல் ஊரைச் சேர்ந்த வேலுச்சாமி என்பவர் ராமலட்சுமி என்ற மனைவியும் 3 மகன்களும் அவருக்கு உள்ளனர். சுப்பையா நாடார் மகன் சக்தி என்பவர், இன்னொருவர், மாண்டு இருக்கின்றார். மற்றவர்கள் சேலம், தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நானே நேரில் சென்று ஆறுதல் கூறி வந்தேன். இப்படிப் பாறையை உடைக்கும்பொழுது அகால மரணம் அடைந்த காரணத்தால் அந்தக் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தங்களுடைய நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் முன்னிலையில் வைக்கிறேன்.

லேப்ர் ஆபீசரிடம் சொல்லி அந்தப் பாறையைக் குத்தகைக்கு எடுத்தவரிடமிருந்தும் அரசாங்கத்தின் மூலமாக அவர்களுக்கு நஷ்டயீட்டை வாங்கித்தர வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, அந்த இருவரும் கொடுத்த மனுக்களையும் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாகத் தீர்மானம் கொடுத்த சிங்காரமும் இதுபற்றி ஒரு தொடர் சொல்லுவார்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்னதைப்போல, அந்த தொழிலாளர்களுக்கு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நம்முடைய முதல்வர் நிதியிலிருந்து நிவாரண நிதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(9-55 மணி)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, திரு. பாண்டியன் அவர்களும் திரு. சிங்காரம் அவர்களும் இங்கே எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து சில விவரங்களை நான்

அந்த மாவட்ட அதிகாரிகளோடு பேசி, பெற்று இருக்கிறேன். அதையும் இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். கல்லிடைக் குறிச்சி காவல் நிலைய சரகம் பொட்டல் கிராமத்தில் அரசாங்கத் திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் சுமார் 5 ஏக்கர் பரப்புள்ள பாறையுடன் கூடிய இடத்தை 30—6—1989 முடிய மூன்று ஆண்டுகளுக்கு, கல் உடைத்து எடுக்கும் உரிமையை அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கதிரேசன் நாடார் மகன் கணேசன் என்பவர் ஏலத்தில் எடுத்து அனுபவித்து வருகிறார். சென்னை, உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்து, 30—6—1989-க்குப் பின்னும் அவரே தொடர்ந்து கல் உடைத்து எடுக்கும் உரிமையை, இடைக்காலத் தடை உத்தரவு மூலமாகப் பெற்று அவரே நடத்தி வருகிறார்.

கடந்த 27—4—1990 வெள்ளிக்கிழமை வழக்கம் போல் குவாரியில் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுமார் 20 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு இருந்தார்கள். அன்று மாலை 4.00 மணியளவில் துளைபோடும் பாறையில் மேல் பகுதியிலிருந்து அதிர்வின் காரணமாக மண் சரிந்து, வேலை செய்து கொண்டிருந்த நாராயணன், முருகேசன் ஆகியவர்களது தலையில் சிறிதளவு விழுந்திருக்கிறது. தொடர்ந்து சுமார் 150 டன் எடையுள்ள பாறை ஒன்று லேசாகச் சரிந்து கீழ்நோக்கி நகர்ந்து இருக்கிறது. இதைக் கண்ட முருகேசன், நாராயணன் ஆகியோரும் மற்ற தொழிலாளர்களும் சத்தம் போட்டுக் கொண்டே வெளியே ஓடி தப்பித்து விட்டார்கள். ஆனால் டிரில்லிங் பிரிவில் வேலை செய்த சக்திவேல், வேலுசாமி, மாதப்பன் மற்றும் மேற்படி பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்த ராதா ஆகியோர் டிரில்லிங் இயந்திரம் எழுப்பிய சத்தத்தால், மற்றவர்கள் பாறை சரிவதாக எழுப்பிய குரலைக் கேட்காமல் பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருக்க, பாறை அவர்கள் மீது விழுந்து அந்த நால்வரும் இடிபாடுகளிடையே சிக்கி இறந்து விட்டார்கள். கற்களை ஏற்றிக்கொண்டிருந்த கண்ணப்பன் என்பவரும் மேற்படி விபத்தில் சிக்கி இரண்டு கால்களையும் இழந்து, தற்சமயம் பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள் நோயாளியாக சிகிச்சைபெற்று வருகிறார். இந்தச் சம்பவம் குறித்து கல்லிடைக்குறிச்சி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது. உடனடியாக, காவல் துறையினரும் அம்பா சமுத்திரம் தீயணைப்புப் படையினரும் சம்பவம் நடந்த இடத் திற்குச் சென்று, இடிபாடுகளில் சிக்கி இறந்து போனவர்களை மீட்க நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

28—4—1990 அன்று காலையில் வேலுசாமி, சக்திவேல் ஆகியவர்களது உடல்களும் அன்று மாலையில் மாதப்பன், ராதா ஆகியவர்களது உடல்களும் மீட்கப்பட்டு, மருத்துவப் பரி சோதனைக்காக அனுப்பப்பட்டன. இறந்தவர்களுடைய

குடும்பங்களுக்கு நிதி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை நம்முடைய பாண்டியன் அவர்கள், இறந்தவர்களுடைய துணைவியார் மூலமாகப் பெற்றுத் தந்து இருக்கிறார். இருந்தாலும்கூட ஏற்கெனவே, நேற்றையதினமே மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக, தொழிலாளிகள் விபத்தில் இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய் அந்தக் குடும்பங்களுக்கு நிதி அளிக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்ததற்கேற்ப இறந்தவர்களுக்கு, நான்கு பேருக்கும் தலா 10,000 ரூபாய் வீதம் அந்தக் குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. கால் இழந்தவருக்கு 7,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ராணி கிரானைட் நிறுவனத்தாரும், ஏலதாரரும் மற்றும் பணியை மேற்பார்வை செய்தவர்களும் முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டிருந்தால் இந்த விபத்து நடைபெற்று இருக்காது என்றும் அவர்களின் கவனக் குறைவும், அஜாக்கிரதையும் இவற்றை ஏற்படுத்தி இருக்கிறது என்றும் புகார் கூறப்பட்டதன் பேரில் 29—4—1990 அன்று இந்த வழக்கு 174, சி.ஆர்.பி.சி. யிலிருந்து, பிரிவு 304-ஏ ஐ.பி.சி.-க்கு மாறுதல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் இருக்கிறது. எதிரிகளைக் கைது செய்யவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்களுக்கு வேறு வகையிலும் வரவேண்டிய தொகைகளையும் பெற்றுத் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) நேப்பியர் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள மேதின நினைவுச் சின்னம் குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் தலைவர் அவர்களே, கடந்த மே தினத்தின்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுவரையில் நேப்பியர் பூங்கா என்று அழைக்கப்பட்டு வந்த தற்போது மேதினப் பூங்கா என்று பெயர் சூட்டப்பட்டிருக்கும் இடத்தில், மே தின் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே இதைப்போல தொழிலாளர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற வகையில் ஒரு சின்னம் அமைக்கப்பட்டதில்லை என்றெல்லாம் அன்று பேசப்பட்டது.

இந்த தேசத்தின் உண்மையான சொத்தாக இருக்கும் அந்த உழைக்கும் வர்க்கத்திற்கு, அவர்களது உழைப்பையும் தியாகத்தையும் நினைவுகூர்கிற வகையிலும் தமிழகத்தின் தலைநகரில் இந்த நினைவுச்சின்னம் அமைப்பதிலே—எங்களை எல்லாம் அந்த